உ

ஓம் சரவணபவாய நம :



# திருவழிபாடு

அல்லது

# முருகன் மானசிக பூஜை


இயற்றியவர் :

நா. கோபாலகிருஷ்ணன்



பால முருகன் பக்தஜன சபையாரால்

13, காசீம் அலி தெரு, சென்னை-5.

கந்தர் சஷ்டி (27—10—'68) அன்று

வெளியிடப்பட்டது.

ஓம் சரவணபவாய நம :

" திருவழிபாடு " அல்லது "முருகன் மானசீக பூஜை என்னும் இத்துதிப்பாடலை, தினமும் காலையில் குளித்தவுட ஈரத்துணியுடனேயே இருந்துகொண்டு, எல்லாம் வல் இறைவன், முருகனது மலர்க்கழல் பாதங்களை மனதி நினைந்து, திருநீறு அணிந்துகொண்டு, மனத்தூய்மையுடன் பக்தி சிரத்தையுடன் படித்துவரின், அன்னாருக்கு சகலவி மான நோய்களும் அகன்று, மனக்கவலைகளும் அகன்று நினைத்தவை கிடைக்கப்பெறும் அறுபடை வீட்டுக்கு சென்று தரிசித்த புண்ணியமும், மற்றும் இறைவனை தினமு அபிஷேகம், ஆராதனை செய்த புண்ணியமும் கிடைக்கும்

' திருவழிபாடு ' படிப்பதற்கு முன் ' கந்தர் சஷ்ட கவசமோ ' அல்லது ' சண்முக கவசமோ ' படிப்ப மிகவும் நன்மை பயக்கும்,

' திருவழிபாடு ' முடிந்தவுடன் 'கந்தரனுபூதி', கந்தரல காரம், தெய்வணிமாலை, திருமுருகாற்றுப்படை, முருக பிள்ளைத்தமிழ், ஆண்டி அஷ்டகம், முருகா நூற்றெட் ஜயஜய வேலவ ஸ்தோத்திரம் முதலியவைகளில் ஏதேனு ஒன்றை பாராயணம் செய்தால் இறைவனது அருள்நோக் உண்டாகி மனேவலிமையும், இன்பமும், இஷ்டங்களையு அடைவர்.

11, பெஸன்ட்ரோடு
சென்னை-14.
27 அக்டோபர் '68

அடியவன்
நா. கோபாலகிருஷ்ணன்
(தலை ஞாயிறு.)

உ

முருகன் துணை.



# திரு வழிபாடு

அல்லது முருகன்

## [மானசிக பூஜை]

### காப்பு

ஓம்கார ரூபனை ஓரானை முகத்தானை
ஓரைந்து கையானை மூலாதார வாசனை
ஓர் வினை யறுப்பானை ஓதியுள்ளம் வைத்து
ஒரு திரு வழிபாட்டினையே உளத்தினில் செய்குவோமே.

மூத்த அண்ணாலே மூஞ்சூறு வாகனனே
மத்தள வயிரோனே சக்தியுமை பாலகனே
மெத்தச் சிவந்தவனை முத்துக் குமாரனை
சித்தம் கொணரவே சித்தி அருள்குவையே

௨. ஆறுமுகத்தோனே அருள்ஞான தேசிகனே
"ஆசனம்" தந்தேன் எந்தன் ஆலய மனத்தினுள்ளே
அன்புடன் "பாத்யம் : "அர்க்யம்" அனைத்துமே
உனக்களித்தேனே
"ஆசமனம்" தந்தேன் வா-நீ அழகிய குருமணி தேவா

• கருணைக்கடலேயுன்னை கண்மணி முருகாயுன்னை
திருமுழுக்காட்ட நல்ல எண்ணையால் காப்பும் செய்து
மருவிலாமேனியதனை மஞ்சள் நீராட்ட நானும்
மலர்க்கழல் பாதம் தொட்டேன் வாழிய வாழியவே.

4. ஆவின் பாலபிஷேகமும் பஞ்ச அமிர்தமும் தயிர்
முழுக்காட்டும்
ஆசையோடு கலந்த நல்ல தேனபிஷேகம் செய்தேன்
ஆவியே அமுதேயுனக்கு இளநீர், பன்னீர் முழுக்கும்
ஆனந்த சுக மணமான சந்தணம் சாற்றினேனே.

5. மந்திரமாவது நீறை சுந்தரமாகவே சாற்றி
மதிவதன மந்தஹாஸம் பார்த்தெந்தன் மெய்சிலிர்த்து
வந்தனம் செய்துசெய்து வாயார வாழ்த்தி வாழ்த்தி
கந்தனே மைந்தா உந்தன் கழல்பதம் கண்வைத்தேனே

6. இலவங்க ஏலம் மற்றும் வாசனைப்பொருள்கள் கூட்டி
இன்பமேயுனக்கு நானும் 'ஆசமனம்' தந்தேனய்யா
எரிதழல் மேனிக்குகந்த செவ்வண்ணைப் பட்டுடுத்தி
அரிமருகா உனக்குநல்ல ஆபரணங்கள் பூட்டினேனே.

பூத்த திருமேனிதன்னில் பூணூலைப் பூட்டிப்பார்த்து
காத்த கைவேல்வைத்து நல்ல கஸ்தூரி திலகம் வைத்து
சீர்த்த உந்தன் அங்கமெல்லாம் சந்தணம்தான்
மெல்லப்பூசி
சீதளப் பிறை நுதலில் சிவந்த குங்குமமிட்டேனே.

செவ்வந்தி செவ்வரளி செந்தாமரை செம்பருத்தியும்
கடப்பமும் ஜாதிமுல்லை செண்பகமும் சம்பங்கியும்
வில்வமும் மருவும் மற்ற நல்லநல்ல வாசம் வீசும்
விதவித மலர்கள் சேர்த்த வண்ணமாலை சூட்டினேனே.

கந்தனே செந்தில்வாழும் குமரனே, வாழிவாழி
தண்பதி தணிகைவாழும் குமரனே, வாழிவாழி
முத்தனே பழனிவாழும் சித்தனே, வாழிவாழி
வித்தகா வேலா உன்னை வாயார, வாழ்த்தினேனே.

சக்திசிவன் சாமிநாதா, திருப்பரங்கிரி தேவநாதா
பக்திசெய்து பாடினேனே, பழமுதிரும் சோலை வாசா
முக்திதரும் ஞானகுருவே சக்திவேலா கந்தா உன்னை
சிக்கனவே மனத்து ஏழாம் படைவீட்டில் கொலு
வைத்தேனே.

குறமகள் காதல்வள்ளி சுரர்மகள் தேவயானை
குழாத்துடன் கூடவந்தென் கும்பிடை ஏற்றுக்கொண்ட
குமரனே, குகனே உனக்கு குறியொடு 'தூபம்' காட்டி
குமிழ்நகை கண்டு நானும் தமிழ்மாலை பாடினேனே.

12. சுடர்மேனி திருவேயுனக்கு சுடர்விட்ட 'தீபம்' காட்டி
சடைமுடி சிவனார்மகனே, விடைதாக்கும் ஈசன் மக
கடல்நிகர் அவுணர்சேனை களம்அறுத்த பாலன்-உ
கண் திருஷ்டி கழித்துக்கட்டி கண்மூடி போற்றினே

13. தத்திமி தாளம்கொட்டி தடையிலா கீதம்பாடி
சுத்தமாய் பரதங்காட்டி சுருதியுடன் மயிலுமாட
கற்றகாவடி கரகமாடி உற்றவாகற்றவா உன்னை
சுற்றிவந்து பாடிஆடி காதல்மனம் காட்டினேனே.

14. மிக்க அடிசிலும் ஒக்கபட்சணமும் தக்கஒரு தட்டில்
வைத்
விக்கலகலவே பானகமும் விழுந்துபடா கனிகள்,
தேங்கா
சக்கரைப் பாயசமும் நல்ல வக்கணை வடையதிரசமும்
பக்குவமாய் வைத்து உன்னை போஜனம்தான் செய்
தே

15. வெற்றிலைப்பாக்கும் நல்ல ஏலமும் கிராம்பும் மற்றும்
வாசனைப் பொருள்கள் கூட்டி தாம்பூலமும் வாயில்
ஊட்
சுற்றியே மணத்தை வீசும் கற்பூர தீபம்காட்டி
கொற்றக் குடை, சாமரமும் குளிர்ச்சியாய் வீசினேனே

16. சுருதியும் வேதம் மந்த்ரம் சொல்லவே தெரியாது ஆ
சுலபமாய் 'முருகா' என்றே 'சரவணபவனே' உன்

சிந்தையில் நிதமும் வைத்து சீர்பதம் போற்றிபோற்றி
வந்தனை செய்தேன் யானும் வளர்புகழ் வானவர்
கோனே.

கண்மணி கந்தாபோற்றி கடம்பனே குமரா போற்றி
என்மனத்தீசா போற்றி என்குறை தீர்ப்பாய் போற்றி
தண்டையணி பாதாபோற்றி கார்த்திகை பாலாபோற்றி
எண்ணிய வரங்கள் எல்லாம் எங்களுக் கருளுவாயே.

சிவகுருநாதா சரணம் இளம்சேய் வீரா சரணம்
குறமகள் நாதா சரணம் குலம்வளர் வேலா சரணம்
அரிமால் மருகா சரணம் கரிமுகன் இளையா சரணம்
முருகா நின்பாதம் சரணம் சரணம் உன்சீரடி சரணம்.

சரணம் சரணம் ஷண்முக பவ ஓம்
சரணம் சரணம் ஷண்முக பவ ஓம்
சரணம் சரணம் ஷண்முக பவ ஓம்
சரணம் சரணம் ஷண்முக பவ ஓம்,

ஓம் தத்சத்.

# வாழ்த்து

இச்சிறு நூல் வெளியிட அருட்கொடை நல்கிப்போ
பெருந்தகையாளர் பலருக்கும் எங்களது உளமார்ந்த நன
யையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

**பால முருகன் பக்தஜன சபைய**

சென்னை - 5.